O.S. No.36/2019

26.09.2022

**வா.சா. 1**

**திருமதி இந்திரா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (3-ம் பிரதிவாதி தரப்பில்)**

பிரதிவாதி இளவர் கிருத்திகா என்பவர் இறந்துபோன சொக்கலிங்கத்தின் மகள் என்றால் சரிதான். வழக்கு சங்கதிகள் 3-ம் பிரதிவாதியான இளவருக்கு தெரியுமா என்றால் தெரியும். சொக்கலிங்கத்தின் மகள் என்ற முறையில் சொக்கலிங்கத்திற்கு ஒதுக்கப்படும் 1 / 2 சொத்துக்களில் 3-ம் பிரதிவாதிக்கும் 1 / 3 பாகம் உண்டு என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தை பொறுத்து இறந்துபோன சொக்கலிங்கம் 4-ம் பிரதிவாதி நிறுவனத்திடம் ரூ.30,00,000/- கடன் வாங்கியிருந்தார். சொக்கலிங்கம் உயிருடன் இருக்கும்போது இருந்த கடன் தொகையை திரும்ப செலுத்தவில்லை. அவரது இறப்பிற்கு பின்னர் 4-ம் பிரதிவாதியின் நிறுவனத்தினர் சொக்கலிங்கத்தின் மனைவிக்கு அறிவிப்பு அனுப்பியும் அந்த தொகையை திரும்ப செலுத்தவில்லை. அந்த

தொகையை நான் 4-ம் பிரதிவாதியின் நிறுவனத்திற்கு தாவா சொத்தில் சொக்கலிங்கத்தின் பாகத்தில் பற்று ஏற்படுத்தி தொகை செலுத்த தயாராக உள்ளேன். அதனால் 3-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தி பங்கு வராது. 3-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பங்கு வராது என்று தவறாக சொல்கிறேன் என்றும் 3-ம் பிரதிவாதி இளவராக இருப்பதால் நான் தெரிவித்த கடன் தொகை அவரது பாக வீதத்தை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அதனால் இந்த தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்,)/-.........
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவாரூர்.